# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

ந.க.எண். 5011/2010/அ3 **வேலை வாய்ப்பு விளம்பர அறிவிப்பு** நாள் : 26.09.2023

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் காலியாக உள்ள தொழில் நுட்ப பணியிடம் (உதவி மின் கம்பியாளர்) தகுதி உள்ள இந்து சமயத்தை சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்- **30.10.2023** மாலை **05.45** மணி வரை திருக்கோயில் இணையதளத்தில் **(www.tiruchendurmurugan.hrce.in.gov.in)** விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்யலாம்.

| வ. எண் | பணியிட விபரம் | சம்பள தொகுப்பு Pay Matrix Level | காலியாக உள்ள பணியிடம் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1. | உதவி மின் கம்பியாளர் | Level 18 ரூ.16,600 – 52,400 | 6 (ஆறு) | 1. அரசால்/அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்/மின் கம்பி பணியாளர் தொழில் பயிற்சி நிறுவன சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். 2. மின் உரிமம் வழங்கல் வாரியத்திடமிருந்து "H" சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

1. இந்து மதத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்ப படிவங்களை திருக்கோயில் அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரடியாகவோ அல்லது இணையதளமான **www.hrce.tn.gov.in** மற்றும் **(www.tiruchendurmurugan.hrce.in.gov.in)** என்ற இணையதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. விண்ணப்பத்துடன் கல்வி சான்றிதழ்கள் மற்றும் பிற ஆவணங்களை இணைத்து இணை ஆணையர் / செயல் அலுவலர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருச்செந்தூர் நகர் மற்றும் வட்டம் - 628 215. தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரிக்கு பதிவு தபாலில் **30.10.2023** மாலை **05.45** மணிக்கு வந்து சேரும் படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.
4. விண்ணப்பதாரர் **01.07.2023** அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கூடுதல் விவரங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.
6. வேலை வாய்ப்பு விளம்பர அறிவிப்பினை நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யவோ நிறுத்தி வைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

செ.ம.தொ.இ/1117/வரைகலை/ 2023

**திருக்கோயில் நிர்வாகம்**